# இளங்கீரன்: ஈழத்துப் புனைகதை உலகின் சாதனையாளர்

**திருமதி றாஹிலா ஸியாட்**

**இளங்கீரனின் வாழ்க்கைப் பின்னணி:**

குறிப்பிட்ட ஒரு படைப்பாளியின் படைப்பு முயற்சிகள் திடீரென்று முளைப்பன அல்ல. கலைஞன் ஒருவன் பிறக்கின்றான் என்ற கொள்கை இருந்தாலும், கலையுள்ளம் பண்பட்டு செம்மாந்த நிலை அடைவதற்குக் கலைஞனின் கல்வியறிவு, பட்டறிவு, புறச்சூழல் மற்றும் அவனது சமுதாயப் பார்வையின் ஆழ அகலங்கள் போன்ற காரணிகளும் துணை செய்கின்றன. இளங்கீரன் என்ற எழுத்தாளருக்கும் அவர் பிறந்த சூழல், சுயகற்றலினால் ஏற்பட்ட உலக இலக்கிய அனுபவங்கள், வாழ்க்கை அனுபவங்கள், சமகால இலக்கிய முயற்சிகளின் தாக்கம் என்பனவும் முற்போக்கு இயக்கம், திராவிட இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் என்பனவும் அவரது படைப்பாக்க ஆளுமைத் திறனைக் கூர்மைப்படுத்த உதவியுள்ளன.

இளங்கீரன் யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணையில் 1927ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி, சாதாரண தையல் தொழிலாளியான சுல்தான் மொஹிதீன் - மொஹிதீன் நாச்சியா தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முஹம்மது கலீல். இருந்தாலும், இவர் வீட்டில் சுபைர் என்றே அழைக்கப்பட்டார். இவரது இளமைக் கல்வி பற்றி ரஹீமா முகம்மத் (1996 : 21) பின்வருமாறு கூறுகிறார்:

> “இவர் தம் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கிலக் கிறிஸ்தவப் பாடசாலையான கிளினர் கல்லூரியில் 1933ஆம் ஆண்டு தொடங்கினார். ஆங்கிலப் பாடசாலையில் கற்றதனால் ஓரளவு ஆங்கில மொழிப் பரிச்சயம் ஏற்பட்டது. தமிழ் மொழி, கணிதம், புவியியல் போன்ற பாடங்களும் இங்கு கற்பிக்கப்பட்டன. இவரது காலில் ஏற்பட்ட சுகயீனம், பொருளாதார வசதியின்மை போன்ற காரணங்களினால் 1940ஆம் ஆண்டில் ஏழாம் வகுப்புடன் இவர் பாடசாலைக் கல்வியை நிறுத்திக் கொண்டார். அவ்வாறு கல்வி இடைநிறுத்தப்பட்டாலும் சுயவிருப்பு, தாயின் ஊக்குவிப்பு முதலியவை காரணமாக பல்துறைப் புத்தகங்களையும் தேடிப்பிடித்து அறிவை விருத்தி செய்து கொண்டார்.”

தன் வாழ்க்கைப் பின்னணியைப் பற்றியும் தான் எழுத்துலகில் புகுந்தமைக்கான காரணங்கள் பற்றியும் இளங்கீரன் “படைப்பும் ஆளுமையும்” (தினகரன் : 1992) என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகின்றார்:

> “நான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நாங்கள் வறுமையின் கொடூரத்தினை அனுபவித்தவர்கள். எங்களைப் போன்றே வறிய குடும்பங்களுடன் தான் என்னால் பழக முடிந்தது. சமூக நிகழ்ச்சிகளில் நான் பார்வையாளனாக மட்டும் இருக்கவில்லை. பங்காளனாகவும் இருந்தேன். அவர்களின் போராட்டங்களில் கலந்து கொண்டேன். என்னைத் தாக்கிய பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தேன். நான் எழுதுவதற்கு இவையெல்லாம் உந்துதலாயிருந்தன.
>
> எழுத்து - இலக்கியம் ஒரு சக்திமிகு சாதனம். எனவே, அதனை ஒரு பொழுதுபோக்காக நான் கொள்ளவில்லை. அடிமைத்தனத்துக்கும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகித் துன்பப்படும் ஏழை மக்களினதும், நெருக்குதல்களைத் தாங்க முடியாமல் திணறும் நடுத்தர மக்களினதும் மீட்சிக்காக இலக்கியம் படைக்க வேண்டும். சமுதாயத்தில் இத்தீமை தவிர்க்க முடியாதவையாகத் தோன்றும்போது பொறுமையுடன் தாங்கிக் கொள்ளப்படுகிறது. அவற்றிலிருந்து விடுதலை பெற முடியும் என்ற எண்ணம் தோன்றியதும் பொறுக்க முடியாதவையாகி விடுகின்றன. அவர்கள் இத்தீமைகளுக்கு எதிராகப் போராடத் தொடங்கி விடுகிறார்கள். இவற்றால் நான் எழுதுவதற்கு உந்தப்படுகிறேன். உண்மையும் பெரும்பான்மை மக்கள் அன்றாட வாழ்க்கையில் காண்பவையுமே எனது இலக்கியத்தின் அடிப்படை.”

இவர் பிறந்தது முதல் தமது இருபதாவது வயதுவரையும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்ந்தார். எனவே, யாழ்ப்பாணத்தின் இயற்கைச் சூழல், சமூக அமைப்பு, சுரண்டல், சீர்கேடுகள் என்பவற்றோடு முக்கியமாக யாழ்ப்பாணத்தில் அன்றைய காலகட்டத்தில்

நிலவிய சாதியமைப்பு, தீண்டாமை போன்ற மனித நேயத்திற்கு எதிரான சமூகக் குறைபாடுகளையும் இவர் நன்கு அறிந்திருந்தார். அதனால் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு பல நாவல்களைப் பிற்காலத்தில் அவரால் எழுத முடிந்தது.

இவரது எழுத்து முயற்சிகளைத் தூண்டிய முக்கிய காரணிகளாக இவரின் மலேசிய, இந்திய பயணங்கள் அமைகின்றன. இவர் 1947ஆம் ஆண்டில் தனது இருபதாவது வயதில் கலீல் என்ற பெயரில் மலேசியா சென்றார். இவரது தந்தை தொழில் தேடி ஏற்கனவே அங்கு சென்றிருந்தார். தந்தையைக் காணும் ஆவலினால் மலேசியா செல்ல வேண்டி ஏற்பட்டது. அங்குதான் அவர் முதன்முதலில் தனது எழுத்துப் பணியை 'இளங்கீரன்' என்ற புனைப் பெயரில் ஆரம்பித்தார். இவர் 'இளங்கீரன்' என தனக்குப் புனைப் பெயரிட்டுக் கொண்டதற்கான காரணத்தை எஸ்.எச்.எம். ஜெமீல் (1998 : 149) பின்வருமாறு கூறுகின்றார்:

> " 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று தனது கருத்தினைத் துணிந்து கூறிய நக்கீரனின் துணிச்சலே தன்னை இளைய கீரன் என்ற கருத்தில்,'இளங்கீரன்' என புனைப் பெயர் இட்டுக் கொண்டதற்குக் காரணமாகும்."

சர்வதேச விவகாரங்களில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்த இளங்கீரன் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் விளைவுகளை அவதானித்து 'இரண்டாவது உலக யுத்தத்தின் பின் உலக நிலை' என்ற தலைப்பில் கோலாலம்பூரிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'ஜனநாயகம்' என்ற தினசரிக்கு எழுதினார். இந்தக் கட்டுரையே இளங்கீரனின் எழுத்துலகப் பிரவேசத்திற்கான கன்னி முயற்சி எனலாம். இவர் தனது எழுத்துலகப் பிரவேசத்தைப் பற்றி 1982ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06ஆம் திகதி இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "உலக நடப்பும் சமுதாய நிலையும் மனித வாழ்க்கையும் என் உணர்வுகளும் என்னுள் எண்ணங்களைப் பிரவேசிக்கச் செய்து சிந்தனையைத் தூண்டியதும் அவற்றைச் சிந்தனையுள் புதைத்து வைக்க முடியவில்லை. அவற்றை வெளியே சொல்லி விடவேண்டும் என்ற துடிப்பு வேகம் பெற்றுக் கொண்டே வந்தது. இதற்கு எழுத்து ஒரு சிறந்த சாதனமாகத் தெரிந்தது. அதில் ஆர்வமும் இருந்தது. அதன் விளைவுதான் என் எழுத்துலகப் பிரவேசம்."

மலேசியாவில் ஈப்போ மாகாணத்தில் அவருக்குக் கிடைத்த களம், நண்பர்கள், இவற்றோடு அவரது உணர்வில் ஊறியிருந்த முற்போக்குச் சிந்தனைகள், அநீதியைக் கண்டு பொங்கி எழும் போக்கு என்பன அவரது எழுத்து முயற்சிகளுக்குத் தூண்டுதலாக அமைந்தன.

ஆரம்பத்தில் பெரும்பாலும் அரசியல் கட்டுரைகளையே எழுதிக் கொண்டிருந்த இவர் 'இனமணி' என்ற வார இதழுக்கு ஆசிரியராக அழைக்கப்பட்டார். அந்தப் பணியை அவர் திறம்படச் செய்து இனமணியை ஒரு தரமுள்ள கலை இலக்கிய சஞ்சிகையாக மாற்றியது மட்டுமல்லாமல், அதை ஏகாதிபத்திய எதிர்ப்பு முனைவுள்ள முற்போக்கு இதழாகவும் மாற்றினார்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனியாக இருந்த காலமது. அக்கால கட்டத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இளங்கீரன் எழுதிய காரசாரமான கட்டுரைகள், அதிகார வர்க்கத்தினருக்குப் பிடிக்கவில்லை. கெடுபிடிகளுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டார். அதுமட்டுமன்றி, பிரித்தானிய ஆட்சியைப் பற்றி எதுவும் எழுதக்கூடாது என்று நிர்ப்பந்திக்கப்பட்டதோடு நாட்டை விட்டு வெளியேறுமாறும் உத்தர விடப்பட்டார். இதனால் இவர் மூன்றாண்டுகள் மாத்திரமே மலேசியாவில் இருந்தார்.

1950ஆம் ஆண்டில் மலேசியாவிலிருந்து சென்னை வந்தடைந்த இளங்கீரன் அங்கு தமது அரசியல், இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்தார். இவர் சென்னை வந்தடைந்த காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளின் தாக்கம் பெரிதும் காணப்பட்டது. அவர் சென்னையிலிருந்தபோது வெளியிட்ட நாவல்கள் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகப் பாணியிலேயே அமைந்திருந்தன. மேலும், எழுத்தாளர் பலருடைய நட்பும் இவருக்குக் கிடைத்தது. இவர்

தம்முடைய இந்திய வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு கூறுவதாக எஸ்.எச்.எம். ஜெமீல் (1998 : 150) குறிப்பிட்டுள்ளார்:

> "எனது ஆக்கங்கள் நூல்களாக வெளிவரும் சாத்தியம் இந்தியாவில் காணப்பட்டது. எனது பேச்சும் எழுத்தும் இந்தியப் பாணியில் அமைந்திருந்தன. இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள் அப்போது பொதுவாக இந்தியச் சஞ்சிகைகளிலோ அல்லது நூலாகவோ வெளிவரவில்லை. 'இந்திய எழுத்தாளர்களைப் போல் இலங்கை எழுத்தாளர்களுக்கு எழுத வராது' என்ற கருத்தும் நிலவியது. இத்தகைய காரணங்களினால் இலங்கையனான என்னை இந்தியாக்காரன் என்று கருதிவிட்டனர். 1955ஆம் ஆண்டுக்குப் பின்புதான் என்னை இந்நாட்டவன் என பலரும் அறிந்து கொண்டனர்."

இவ்வாறு கடல்கடந்த நாடுகளில் தமது இலக்கிய வாழ்வின் முதற்கட்டத்தை முடித்துக் கொண்டு இளங்கீரன் 1954ஆம் ஆண்டு இறுதியில் தாய் நாட்டிற்குத் திரும்பினார். 1950களில் ஈழத்து இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு நாட்டு நிலைமையில் ஏற்பட்ட மாற்றம் முக்கிய காரணமாக அமைந்தது. 1956ஆம் ஆண்டில் பண்டாரநாயக்காவின் தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைபற்றியமை, தேசிய முதலாளித்துவம் அதிகார முதன்மை பெற்றதையே குறித்தது. இக்காலத்திலேயே தேசியம் என்ற கோட்பாடு வலுப்பெற்றது. தேசிய மரபுகளும் பண்பாட்டு அம்சங்களும் பேணப்பட்டன.

இக்காலப் பகுதியை அடுத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்ற ஸ்தாபனமாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயற்பட்டது. இடதுசாரி அரசியல் சித்தாந்தத்தைப் பொதுவாகச் சார்ந்திருந்த இச்சங்கம் இலக்கியத்தில் தேசியப் பிரச்சினை இடம்பெற வேண்டும் என்பதை வற்புறுத்தியது. 1954ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் தோற்றத்திற்கு மூலகர்த்தாவாகவும் அதன் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவராகவும் இளங்கீரன் செயற்பட்டார். அத்தோடு 1955ஆம் ஆண்டில் யாழ்கிளைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

தேசிய இலக்கியம், சோசலிச யதார்த்தவாதம் முதலிய கோட்பாடுகளை முன்வைத்து இந்நாட்டின் கலை இலக்கியப் பரப்பில் பெருந்தாக்கத்தையும் விழிப்பையும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்படுத்தியது. இளங்கீரன் இச்சங்கத்தின் இலட்சியங்களையும் கொள்கைகளையும் எடுத்து விளக்கும் அதன் முன்னணிப் பேச்சாளராகவும் விளங்கினார். அத்தோடு பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி, ஏ.எம். சமீம், சில்லையூர் செல்வராஜன், காவலூர் இராசதுரை, டொமினிக்ஜீவா, அப்துல் லத்தீப், வரதர், பிரேம்ஜீ, ஞானசுந்தரம், எஸ். சோமகாந்தன் போன்றவர்களுடன் இணைந்து ஈழத்து முற்போக்குத் தத்துவங்களை முன்னெடுத்துச் சென்றவர். பண்டித எழுத்தாளர்களுக்கும் நவீன எழுத்தாளர்களுக்கும் இடையில் நடந்த மரபுப் போராட்டத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய சக்தியாக நின்று செயற்பட்டவர். இச்செயற்பாடுகள் அவரது எழுத்தாற்றலைக் கூர்மைப்படுத்தின.

இவரது நாவல்கள் பல இக்காலகட்டத்தில் தினகரன் பத்திரிகையில் தொடர்கதைகளாக வெளிவந்தன. இவரது தொடர்கதைகளில் வாசகர்கள் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதை அப்பொழுது தினகரனின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய கைலாசபதி, (1999 : 209) பிரபல ஆங்கில நாவலாசிரியரான சார்ள்ஸ் டிக்கன்ஸுடன் இளங்கீரனை ஒப்பிட்டுக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

அவரது எழுத்து முயற்சிகளுக்கு 'மரகதம்' என்ற இதழ் வெளியீடும், பல பத்திரிகைகளுக்கு அவர் ஆசிரியராகக் கடமையாற்றியமையும் உந்துதலாக அமைகின்றன. 1961ஆம் ஆண்டில் இளங்கீரன் 'மரகதம்' என்ற கலை இலக்கியத் திங்களிதழை வெளியிட்டார். இச்சஞ்சிகை நான்கு இதழுடன் நின்றுவிட்டது ஆனால் இன்றுவரை சிறப்பித்துக் கூறப்படும் ஒரு சஞ்சிகையாகவே விளங்குகின்றது. 1961ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் 'மரகதம்' வெளிவந்தது. அதன் ஆசிரியரான இளங்கீரன் அதன் முன் பக்கத்தில் சஞ்சிகையின் நோக்கத்தையும் குறிக்கோளையும் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்:

> "மக்களுக்குத் தீமையான எதையும் சொல்லவோ, சுய நலக்காரர்களும் குறுகிய மனப்பான்மையுள்ளவர்களும் தம் கருத்தை என்மூலம் வெளியிடவோ நான் என்றும் அனுமதிக்க மாட்டேன். எல்லா ஆக்க வேலைகளுக்கும் ஆதரவாக இருப்பதுடன் அவற்றிற்கான மக்கள் ஆதரவையும் உருவாக்குவேன். உலகம்

என்ற என் வீட்டிற்கு தமிழ் வாயில்.''

(இளங்கீரன், 1961 : முன்னுரை)

மேலும், அவர் மரகதம் இதழில் (1961 : 64) 'என்பக்கம்' என்ற பகுதியில், மரகதம் சஞ்சிகையின் கொள்கை உறுதிப்பாட்டை பின்வருமாறு விளக்குவது நோக்கத்தக்கது:

> ''பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தீமையாவது செய்யாமலிரு. அதுவே நீ செய்யும் நன்மையாகும். இப்பொன்மொழி மரகதத்தின் கொள்கைகளில் ஒன்று. எனவே, கலை இலக்கியம் என்ற போர்வையில் அல்லது பொழுதுபோக்கு என்ற சாக்கில் சமுதாயத்திற்குத் தீங்கு பயக்கத்தக்கது என்ற தனக்குத் தெரிந்த எதையும் மரகதம் சொல்லமாட்டாள். எனவே,'மார்க்கெட்' பிடிக்க வேண்டும் என்பதற்காக 'வாசகர் ருசி' என்று கருதப்படுகின்ற மட்டரகமான விசயங்களையும் வாழ்க்கைக்குத் துளியும் பிரயோசனமற்ற விசயங்களையும் மரகதம் அளிக்க மாட்டாள்.''

1960ஆம் ஆண்டில் இளங்கீரன் இலங்கையில் வெளியான கொம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'தேசாபிமானி'யின் ஆசிரியராகப் பணியாற்றினார். 1965ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டுவரை 'தொழிலாளி' என்ற பத்திரிகைக்கும், 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1977வரை 'ஜனவேகம்' என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராகக் கடமையாற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

1970ஆம் ஆண்டு தொடக்கம் 1973ஆம் ஆண்டுவரை மருதமுனையில் அவர் வாழ்ந்த காலத்தில்கிழக்கு மாகாண எழுத்தாளர்களுடனும், இலக்கியவாதிகளுடனும் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். 1973 இலிருந்து 1987 வரை கொழும்பில் வாழ்ந்த இளங்கீரன் 1987இல் நீர்கொழும்புக்குத் தனது மூத்த மகளுடன் இடம்பெயர்ந்தார். பின்பு 1990ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்திலே வாழ்ந்தார். இவருடைய வாழ்க்கையின் இறுதிக் காலத்தைப் பற்றி கவிஞர் ஏ. இக்பால் (1996 : 22) பின்வருமாறு கூறுகிறார்:

> ''யாழ்ப்பாண மண்ணிலிருந்து அம்மண்ணின் கலாசாரம் மொழி இலக்கியத்தைக் காத்தவர்களையே துரத்தியடித்த சுழிக்குள் இளங்கீரனும் அகப்பட்டார். அதன் தாக்கம் அவரது தலையில் தொப்பியை வரித்துக் கொண்டது. மாக்சீய மதத்தை விட்டாரோஎன்னவோ ஒரு சமூகத்தின் கலாசார அடையாளத்தைப் பேணிக் கொண்டார். அவரது முதுமைக் காலத்தில் 'சுபைர்' என்னும் இயற்பெயரை தம்முடைய புனை பெயருடன் சேர்த்துக் கொண்டார்.''

1992ஆம் ஆண்டிற்குப் பின் அவரல் வெளியிடப்பட்ட நூல்கள் 'சுபைர் இளங்கீரன்' என்ற பெயரைத் தாங்கி வெளிவந்திருப்பது நோக்கத்தக்கது. சுமார் அரை நூற்றாண்டு கால இலக்கியப் பணிக்காகப் பல பாராட்டுதல்களையும் விருதுகளையும் இளங்கீரன் பெற்றுள்ளார். 1992ஆம் ஆண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு 'தாஜுல் அதீப்' என்ற பட்டத்தையும், சான்றிதழ், பணப்பரிசு என்பவற்றையும் வழங்கி கௌரவித்தது. அதே ஆண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு 'இலக்கியச் செம்மல்' என்ற விருதினையும் வழங்கியது. 1993ஆம் ஆண்டில் சுதந்திர இலக்கிய விழாவிலும் கௌரவிக்கப்பட்டார். மேலும் மறைந்த பிரதமர் மாண்புமிகு ஸ்ரீமாவோ ஆர்.டீ. பண்டாரநாயக்கா அவர்களின் 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 1996ஆம் ஆண்டில் 'விஷ்வபிரசாதினி' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**இளங்கீரனின் இலக்கிய முயற்சிகள்:**

காலம் கலைஞர்களைப் பெற்றெடுக்கின்றது. காலத்தின் பிரதிபலிப்பாகக் கலைஞனைக் காணமுடியும். அவன் காலத்தின் பிரதிபலிப்பாக மட்டுமன்றி அதனை உருமாற்றுகின்ற தனிப்பெரும் சக்தியாகவும் விளங்கலாம். காலத்தின் குரலாக ஒலிப்பவனும் கலைஞனே. மாறாக அதன் எதிர்ப்புக் குரலாகவும் எழுச்சிக் குரலாகவும் ஒலிப்பவனும் அவனே. ஆகவே, ஒரு படைப்பாளியை இனங் காண்பதற்கு அவனுடைய படைப்புச் சூழலையும் அவன் படைப்பின் பின்புலங்களையும் அறிவது அவசியமாகும்.

இளங்கீரனின் இலக்கிய வாழ்வு 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 50 ஆண்டுகளைக் கொண்டதாகும். இவரது முதல் எழுத்துலகப் பிரவேசமானது 1947ஆம் ஆண்டில் அவர் மலேசியாவில் இருந்தபோது நிகழ்ந்தது. இவர்

தமது படைப்பிலக்கியக் கொள்கையைப் பற்றி 1992.04.11 அன்று வெளியான தினகரன் பத்திரிகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

> “சிறந்த கலை இலக்கியம் சாதாரண மக்களின் வாழ்வோடு இணைந்ததாக இருப்பதையே நான் விரும்புகிறேன். உண்மையும் பெரும்பான்மை மக்கள் அன்றாட வாழ்க்கையில் காண்பவையுமே எனது இலக்கியத்தின் அடிப்படை. இதனை ஏற்றுக்கொள்ளும் எழுத்தாளன் மேற்கூறிய சமுதாய நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கிவிட்டால் மட்டும் போதாது. அந்நோக்குடன் அவன் ஜீவனும் கலந்து ஒன்றிட வேண்டும். இந்தவகையிலே என் இலக்கியப் படைப்புக்களைச் சிருஷ்டித்தேன்.”

**நாவல்கள்:**

இவரது இலக்கிய முயற்சிகளுள் நாவல்களே பிரதான இடம் பெறுகின்றன. இளங்கீரனின் முதலாவது நாவலான கலாராணி 1952ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் இந்த நாவல் எழுதியதன் நோக்கத்தைப் பற்றி இலங்கை வானொலிப் பேட்டி (1982) ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்:

> “முதலில் நான் எழுதியது நாவல் அல்ல; கட்டுரைகளும் சிறுகதைகளும் குறு நாவல்களுமே எழுதினேன். அதன் பின்னர்தான் என் முதல் நாவலான கலாராணியை எழுதினேன். கலையோ இலக்கியமோ அது மனித சமுதாயத்திற்குப் பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஆனால், கலையும் இலக்கியமும் பெரும்பாலும் வர்த்தகப் பண்டமாக ஆக்கப்படுவதைப் பார்த்தபோது என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடுதான் ‘கலாராணி’ என்னும் அந்த முதல் நாவல். அது 1952இல் வெளிவந்தது.”

இளங்கீரன் 1950ஆம் ஆண்டு தொடக்கம் 1954ஆம் ஆண்டு வரை சென்னையில் தமது இலக்கியப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டதன் பயனாக இந்திய மக்களின் வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்டு 1952ஆம் ஆண்டில் ‘கலாராணி’ ‘காதல்உலகினிலே’‘மாதுளா’‘வண்ணக்குமரி’‘அழகு ரோஜா’‘பட்டினித் தோட்டம்’ ஆகிய நாவல்களையும் 1954ஆம் ஆண்டில் ‘ஆணும் பெண்ணும்’ என்ற நாவலையும் 1955ஆம் ஆண்டில் ‘எதிர்பார்த்த இரவு’‘மனிதனைப் பார்’ ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார்.

1954ஆம் ஆண்டின் இறுதியில் இளங்கீரன் தமது தாய் நாடான இலங்கை திரும்பினார். அப்போது, தினகரன் பிரதம ஆசிரியராக இருந்த மறைந்த திரு. நாதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தினகரனில் புயல் அடங்குமா? (1954), சொர்க்கம் எங்கே? (1955), மனிதர்கள் (1956), நீதியே நீ கேள்! (1961), இங்கிருந்து எங்கே? (1962), காலம் மாறுகிறது (1962), என்ற பல தொடர் நாவல்களையும் ஆனந்தனில் தென்றலும் புயலும் (1956) என்ற நாவலையும் ஒளி என்ற பத்திரிகையில் அன்னை அழைத்தாள் (1962) என்ற நாவலையும் வீரகேசரியில் அவளுக்கு ஒரு வேலை வேண்டும் (1972) என்ற நாவலையும் எழுதியுள்ளார்.

‘அவளுக்கொரு வேலை வேண்டும்.’ என்ற நாவலுக்குப் பிறகு இளங்கீரன் வேறு நாவல்கள் எழுதவில்லை. இளங்கீரன் அவர்கள் பத்திரிகைகளின் ஊடாகவே படைப்புலகில் செல்வாக்குப் பெற்றிருந்தார். இலங்கையில் இவர் எழுதிய நாவல்கள் எல்லாம் பத்திரிகைத் தொடர்கதைகளாகவே வெளிவந்தவை. அவற்றுள் மூன்று நாவல்களே பின்னர் நூலுருப் பெற்றன. இவரது ‘நீதியே நீ கேள்’ என்ற நாவல் இரண்டாம் முறையாகவும் பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இளங்கீரன் சென்னையிலிருந்த காலகட்டத்தில் வெளியிட்ட ஒன்பது நாவல்களும் பத்திரிகைத் தொடராக வெளிவரவில்லை. நூலுருப் பெற்றே வெளிவந்தன.

**சிறுகதைகள்:**

இளங்கீரன் 1950ஆம் ஆண்டில் ‘மதுர கீதம்’ கருகிய மொட்டு கள்ளத் தோணி ஆகிய சிறுகதைளை ‘பொன்னி’ என்ற பத்திரிகையிலும் ‘தாலிக்கொடி’ என்ற சிறுகதையை கலைச் செல்வி என்ற பத்திரிகையிலும் ‘வாழ்வு சாகவில்லை’‘சொர்க்கமும்நரகமும்’‘நவீன ஷைலக்’‘காதல் பிழைத்தது’ என்ற சிறுகதைளை தினகரன் பத்திரிகையிலும் எழுதியுள்ளார்.

வானொலியிலும் இவரது பல சிறுகதைகள் ஒலிபரப்பாகியுள்ளன. 1970ஆம் ஆண்டிலும் 1980ஆம் ஆண்டின் முன்கூறிலும் ஒலிபரப்பான வானொலிச் சிறுகதைகளுள் ‘நிறைவைத் தேடி’,‘சிந்தனையைத் தெளிவாக்கிய

சிரிப்பு’,‘கதாநாயகன்’,‘புதுமனிதன்’,‘பெரிய இடத்திற்கு வந்தபோது’,‘தலைப்பிறை’,‘வெறும்பேச்சு’,‘கடைசி வார்த்தை’,‘திருத்த வேண்டிய பிழை’,‘மூடிக் கொண்ட இதயம்’ ஆகிய 10 சிறுகதைகள் ‘நிறைவைத் தேடி’ என்ற பெயரில் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளன.

நடைமுறைச் சமுதாய வாழ்வில் காணப்படும் வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள், சாதி இன முரண்பாடுகள், பெண்ணடிமைத்தனம் போன்ற சமுதாயச் சீர்கேடுகளைத் தமது நாவல்களில் கருப்பொருளாகக் கொண்டது போல சிறுகதைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

**நாடகங்கள்:**

இளங்கீரன் மேடைக்காகவும் வானொலிக்காகவும் பல நாடகங்களை எழுதியுள்ளார். பலரது பாராட்டுக்களையும் பெற்ற அவரது நாடகம் ‘மகாகவி பாரதியார்’ ஆகும். இந்நாடகம் 1979ஆம் ஆண்டு பாரதி தினத்தையொட்டி வானொலிக்காக எழுதப்பட்டது. மேலும் இது பாரதி நூற்றாண்டில் மேடையேற்றுவதற்காக விரிவாக்கப் பட்டு 1982ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி கொழும்பு டவர் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது. பின்னர் இரண்டாவது தடவையாகவும் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.

‘கவிதை தந்த பரிசு’ என்னும் வானொலி நாடகம் 1976ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. ‘நீதிக்காக செய்த அநீதி’ என்ற நாடகம் 1978ஆம் ஆண்டு ஜுலை 22ஆம் திகதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பின்னர் கொழும்பு பொரளை டி.எஸ். சேனாநாயக்கா மகா வித்தியாலயத்தில் தமிழ் மன்றத்தினால் நடிக்கப்பட்டது. மனுநீதிச் சோழன் பசுவிற்கு நீதி வழங்குவதற்காகத் தன் மகனுக்குக் கொலைத் தண்டனை விதித்து அவனைத் தேர்க்காலில் போட்டு நசுக்கிக் கொன்றான். இக்கதை உண்மையா? அல்லது கற்பனையா? என்பது ஆய்வுக்குரியது. ஆயினும் இக்கதை மனுநீதிச் சோழனின் நீதி வழுவாத ஆட்சியை எடுத்துக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது. இதனை வைத்து அவ்வரசனைப் போற்றிப் புகழ்வதுமுண்டு. ஆனால் மனுநீதிச் சோழன் வழங்கிய நீதி பிழையானது என்பதை விளக்குவதே இந்நாடகம்.

‘மகாகவி பாரதி’,‘கவிதை தந்த பரிசு’,‘நீதிக்காக செய்த அநீதி’ ஆகிய இந்த மூன்று நாடகங்களும் ‘தடயம்’ என்ற பெயரில் தொகுப்பாக 1992இல் வெளிவந்தது. மேலும், 1980ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான இவரது நாடகங்களான ‘கலியாணச் சாப்பாடு’,‘மஹர்’,‘இரவல் நகை’,‘வெறுங்கனவல்ல’,‘ஓ …… ஜெரூஸலம்’ ஆகியவை 1993இல் வெளிவந்த ‘வெறுங்கனவல்ல’ என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

இவை தவிர இன்னும் பல நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பாகின. 1970களில் ‘வாழப் பிறந்தவர்கள்’ என்ற நாடகம் இலங்கை வானொலியில் தொடராக இரண்டரை வருடங்களாக ஒலிபரப்பாகியது. ‘சகோதரிகள்’,‘மாதச் சம்பளக்காரர்’,‘வர்க்கச் சுவர்’,‘பிர்தௌஸி’,‘மனித புராணம்’,‘திப்பு சுல்தான்’,‘ஜிஹாத்’,‘நிறைந்த மனம்’,‘சொல்ல மாட்டேன்’,‘நீதியின் சந்நிதானத்தில்’,‘செய்த்தானின் அடிமைகள்’,‘உயிர்த் தியாகம்’ என்பன இவரது இன்னும் சில வானொலி நாடகங்களாகும்.

இளங்கீரன் பல்துறை சம்பந்தமான வானொலி உரைகளை 1973ஆம் ஆண்டு தொடக்கம்1977ஆம் ஆண்டு வரையில் தமிழ் சேவையிலும் முஸ்லிம் சேவையிலும் ஆற்றியுள்ளார்.

**கட்டுரைகள்:**

1947ஆம் ஆண்டில் மலேசியாவில் இருக்கும்போது ‘ஜனநாயகம்’ என்ற மலேசியப் பத்திரிகையில் அவரது அரசியல் கட்டுரையான ‘இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலக நிலைமை’ வெளியாகியதைத் தொடர்ந்து அரசியல், கலை, இலக்கியம், மொழி, சமயம், பொருளாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்திய, மலேசிய, இலங்கைப் பத்திரிகைகளில்பல கட்டுரைகள் வெளியாகியுள்ளன. அவற்றுள் ஆணும் பெண்ணும் (1954) இலங்கையின் இருமொழிகள் (1957) பாரதி கண்ட சமுதாயம் (1955) பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் (1992) தேசிய இலக்கியமும் மரபுப்

போராட்டமும் (1993) ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும் (1994)ஆகிய கட்டுரைகள் நூலுருப் பெற்றுள்ளன.

இளங்கீரனுடைய 'ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும்' என்ற நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய விருது, கலாசார அமைச்சினால் வழங்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த நூல் பற்றி 1994.03.28ஆம் திகதி வீரகேசரி ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது:

> ''நாட்டிலே பிரச்சினைகள் போராட்டங்கள் அல்லது அமைதியீனங்கள் ஏற்படும் போது இலக்கியமும் அதன் ஆதார சுருதியாக விளங்கும் எழுத்தாளர்களும் எந்த வழியில் சென்றார்கள்? இனி எவ்வாறு செல்ல வேண்டும் போன்ற விடயங்களையெல்லாம் கோடிட்டுக் காட்டும் வகையில் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்க வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது. இளங்கீரனின் இந்தப்பணி காலங்கருதிய பணியாகும்.''

யாழ்ப்பாணத்தில் பிறந்து, மலேசியாவில் இலக்கியப் பணியைத் தொடங்கி, தமிழ் நாட்டில் பிரபல்யமாகி, இலங்கை திரும்பி, யாழ்ப்பாணம், மருதமுனை, கொழும்பு ஆகிய இடங்களில் தமது இலக்கியப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு சுமார் அரை நூற்றாண்டு கால எழுத்துப்பணிக்குப் பின்பு 1996ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி அன்று நீர்கொழும்பில் தமது 69ஆவது வயதில் காலமானார். எழுதுவதையே தமது முழுநேரப் பணியாக மேற்கொண்ட இவரது எழுத்துக்கள் காலத்தின் தேவை கருதி எழுதப்பட்டவையாகவும் சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்கின்றவையாகவும் அமைந்துள்ளன.

இவரது எழுத்துக்களின் முக்கியத்துவத்தைப் பற்றி செங்கையாழியான் (2000 : 3) குறிப்பிடுவது இளங்கீரனின் புனைகதையுலகுச் சாதனைகள் பற்றி அறிய முற்றிலும் பொருத்தமாகும்:

> ''இளங்கீரனின் வருகையுடன்,ஈழத்துத் தமிழ் நாவல் கலையழகு பெறத் தொடங்கியது. 1950களில் இளங்கீரன் நாவலிலக்கியத்தில் காலடி எடுத்து வைத்தார். அவரால் இந்த மண்ணையும் மக்களையும் கொண்டு பல நாவல்களை எழுத முடிந்தது. ஈழத்து நாவல் துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இளங்கீரன் காரணகர்த்தாவாக உள்ளார். அவரது நாவல்களில் வாக்கியமும் சாதியமும் இடம்பெற்றமைக்கு அவர் வரித்துக் கொண்ட சிந்தனைகளும் காரணமாயின. வாக்கியச் சிந்தனைகளையும் சாதியச் சிந்தனைகளையும் ஆக்க இலக்கியத்தில் நாவல் துறையில் முன்னெடுத்தவர் இளங்கீரன்.''

**துணை நூல்கள்:**


1. இக்பால், ஏ. கவிஞர், (1996),*இலக்கிய ஊற்று,* கொழும்பு, பேசும்பேனா வெளியீடு.
2. இளங்கீரன், (1961),*''என்பக்கம்''*, மரகதம், கொழும்பு.
3. இளங்கீரன், (1992),*தடயம்,* சென்னை, இளவழகன் பதிப்பகம்.
4. இளங்கீரன், (1992),*''படைப்பும் ஆளுமையும்: நான் எப்படி எழுதினேன்?''*, கொழும்பு, தினகரன். (05.17.1992)
5. இளங்கீரன், (1996),*நிறைவைத்தேடி,* கல்கின்னை, தமிழ்மன்றம்.
6. கைலாசபதி, க., (1999),*தமிழ் நாவல் இலக்கியம்,* சென்னை, குமரன் பப்ளிசர்ஸ்.
7. செங்கையாழியான், (2000),*நானும் எனது நாவல்களும்,* கொழும்பு, மல்லிகைப்பந்தல் வெளியீடு.
8. றஹீமா முஹம்மத், (1996),*இளங்கீரனின் இலக்கியப்பணி*, ராஜகிரிய, தமிழ்மன்றம்.
9. ஜெமீல், எஸ். எச். எம்., (1998),*காலச்சுவடுகள்,* சென்னை, இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்.